அசல் வழக்கு எண் 1241 /2024

தேதி 04.11.2025

பெயர் காசி விஸ்வநாதன் (PW-1)

<u>சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்</u>

<u>குறுக்கு விசாரணை :- (1 முதல் 5 பிரதிவாதிகளுக்காக)</u>

ராமலிங்கத்திற்கும் 1ம் பிரதிவாதிக்கும் சிதம்பரம்தான் அவர் பூர்வீக ஊர் என்றால் சிதம்பரம் பக்கத்தில் இருக்கும் விளாகம் கிராமம்தான் அவர்கள் ஊர் ஆகும். வழக்கு சொத்தில் ஒரு பெரிய வீடு உள்ளது என்றால் வீடு இடிந்த நிலையில் உள்ளது. வா.சா.ஆ.9, 10,12 மற்றும் 13 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரி. செந்தில் மற்றும் உதயகுமார் என்பவர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான், செந்தில் மற்றும் உதயகுமார் போலி ஆவணம் தயார் செய்ததாக எங்கள் மீது குற்றவியல் வழக்கு இருந்தது என்றால் எனக்கும் அவ்வழக்குக்கும் சம்பந்தமில்லை. 19.02.2020 அன்று ஏற்படுத்தப்பட்ட பொது அதிகார ஆவணம் மற்றும் 13.03.2020 உதயகுமார் பெயரில் ஏற்பட்ட கிராய பத்திரம் செல்லாது என்று சொல்லி மாவட்ட பதிவாளர் உத்தரவு பிறப்பித்து அந்த ஆவணங்களை ரத்து செய்துள்ளார் என்றால் தெரியாது. நான், செந்தில் மற்றும் உதயகுமார் கூட்டாக சதி செய்து மேற்கண்ட ஆவணங்களை போலியாக தயரர் செய்ததால்தான் அந்த ஆவணங்கள் ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல, எனக்கு உதயகுமார் மற்றும் செந்திலை யார் என்று தெரியாது. அந்த ஆவணங்கள் ரத்து செய்யப்பட்டதால் தான் நான் செந்தில், உதயகுமார் தூண்டுதலின் பெயரில்இந்த பொய்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 முதல் 20 ஆகியவை

வழக்கு சொத்துக்கு சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. 4 மற்றும் 5 பிரதிவாதிகள் வெளிநாட்டில் இருப்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தான் இங்கு இருக்கிறார்கள் என்றால் சரி. ராமலிங்கம் இறந்த பிறகுதான் இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரி. 1ம் பிரதிவாதி எங்கு வேலை பார்த்தார் என்றால் வேலைக்கு போகவே இல்லை. ராமலிங்கம் பினாமியாக 1ம் பிரதிவாதி பெயரில் வழக்கு சொத்தை வாங்கினார் என்றால் சரி. நான் சொல்வது தவறு என்றும் 1ம் பிரதிவாதி அவர் பெயரில் விண்ணபித்தன் பெயரில் அவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் சரி, தற்போது சாட்சி இல்லை என்று கூறுகிறார்.

(வழக்குரைஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)